# SILOAM APOSPOLIC CONGREGATION - ABU DHABI

*But as for me, I am poor and needy; may the Lord think of me. You are my help and my deliverer; you are my God, do not delay.* Psalms 40:17

## Monthly Magazine | November 2021



MULTILINGUAL

# CONTENTS


## About Congregation

*Pg – 3, Congregation's Vision, Mission Statement and Motto*

## Monthly Promise Message

*Pg –4, நான் சிறுமையும் எளிமையுமானவன், கர்த்தரோ என் மேல்*

## Family Corner

*Pg – 5, கர்த்தர்மேல் நம்பிக்கை*

## Youth Corner

*Pg – 6, IS GOD INTERESTED IN OUR ACADEMIC AND PROFESSIONAL LIFE?*

## Kids Corner

*Pg – 7, Marco & Forest, Kids Series END*

*"GUESS THE END CONTEST WINNER"*

## Missionary Life

*Pg's – 8, REES HOWELLS*

## Testimony Time

*Pg – 9, Sis. Usha Velmurugan*

## Talent Corner

*Pg's – 10, Drawings and Illustrations*

## Quiz

*Pg – 11, Exiting Prizes are Awaiting*

## Quiz Score Board

*Pg – 12, Congratulations for the winners*

## Training & Development

*Pg –13, How to Use Snipping Tool*

*(Less known Tool in Windows)*

## Events & Announcements

*Pg – 14, Congregation announcements and events*

# About Congregation

# SAC

We **"SILOAM APOSTOLIC CONGREGATION"** (SAC) started in the year 2013, April 26. The Lord Almighty revealed His vision for the congregation to persist in the apostolic ministry, to one of the congregation member through a dream and to another through a vision. The word "Siloam" shall mean "Sent to receive the blessings of our Lord Almighty in one's personal life". The word "Apostolic" shall denote "Sent to impart the blessings of our Lord Almighty to others".

VISION OF THE CONGREGATION

"We must do the works of Him who sent us" – John 9:4

"நாம் நம்மை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும்" - யோவான் 9:4

MISSION OF THE CONGREGATION

The congregation exists to do everything for Christ, with one accord in Christ, rooted in the Scripture and the guidance of the Holy Spirit, for the sole purpose of making the kingdom of God a crowded place.

MOTTO OF THE CHURCH

"Everything for Christ".

"எல்லாம் கிறிஸ்துவுக்கே"

PERSONAL MOTTO

"Do something at least for Christ"

"கிறிஸ்துவுக்காக ஏதாவது செய்"

# Promise Word

## நான் சிறுமையும் எளிமையுமானவன், கர்த்தரோ என் மேல் நினைவாயிருக்கிறார்

10 மாதங்கள் வேகமாக கடந்துப் போய்விட்டது. 11வது மாதத்தில் நாம் காலடி எடுத்து வைத்திருக்கிறோம். *"இது வரை நடத்தினவர். இன்னும் நடத்துவார். அவர் நம்மை கைவிட மாட்டார்." இந்த புதிய மாதத்திற்கான வாக்குத்தத்த வசனம்.

**"நான் சிறுமையும் எளிமையுமானவன், கர்த்தரோ என் மேல் நினைவாயிருக்கிறார்: தேவரீர் என் துணையும் என்னை விடுவிக்கிறவருமாயிருக்கிறீர்." சங்கீதம் 40:17**

**அதியாகமம் 21**ஆம் அதிகாரத்தில் ஒரு சம்பவம் வருகிறது. அதை இந்த மாதத்தின் முதல் நாளிலே நாம் தியானிக்கப் போகிறோம். இஸ்மவேலுக்கு இப்பொழுது சுமார் 16 வயது இருக்கும். தன்னை விட சுமார் 15 வயது இளையவனான ஈசாக்கை அவன் துன்பபடுத்தினான். "மாசத்தின்படி பிறந்தவன், ஆவியின்படி பிறந்தவனைத் துன்பப்படுத்தினான்." **(கலாத்தியா 4.29)** "பரியாசம் பண்ணினான்" என்று **(ஆதியாகமம் 21.9)** இல் போடப்பட்டு இருக்கிறது. இதைப் பார்த்து சாராளால் சகித்துக்கொள்ள முடியவில்லை. எப்படி சகித்துக்கொள்ள முடியும்? அவள் ஆபிரகாமிடம் வந்து சொல்லுகிறாள். "இந்த அடிமை பெண்ணையும், அவள் மகனையும் புறம்பே தள்ளும்." "துரத்தி விடு" என்று சொல்லுகிறாள். ஆகாரை, சாராள் தான் உள்ளே கொண்டு வருகிறாள். இப்பொழுது, அதே சாராள் தான் "இந்த ஆகாரைத் துரத்தி விடு" என்று சொல்லுகிறாள். இது என்ன நியாயம்? ஆபிரகாம் மட்டும் அன்று சாராளை எதிர்த்துப்பேசி இருப்பான் என்றால் – "நினைத்தால் நீ உள்ளே கொண்டு வருவாய்; நினைத்தால் வெளியேற்றுவாய். இது என்ன விளையாட்டா. ஒரு பெண்ணின் வாழ்க்கையோடு விளையாடாதே." இப்படி அவன் சொல்லி இருப்பான் என்றால், சாராளால் ஒன்றும் செய்து இருக்க முடியாது. தேவனும் இந்த காரியத்தில் தலையிட்டிருக்கமாட்டார்.

சாராள், "ஆகாரை புறம்பே தள்ளும்" என்று சொல்லுகிறார். ஆபிரகாமால் பதில் ஒன்றும் பேச முடியவில்லை. தேவனும் சொல்லுகிறார். அந்த பிள்ளையையும், உன் அடிமைப்பெண்ணையும் குறித்துச் சொல்லப்பட்டது உனக்கு துக்கமாயிருக்க வேண்டாம்: ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும்: ஆதலால் சாராள் உனக்குச் சொல்வதெல்லாவற்றையும் கேள். **(ஆதியாகமம் 21:12)** கர்த்தர் என்ன சொல்லுகிறார்? "ஆகாரைத் துரத்திவிடு" என்று சொல்லுகிறார். ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து அப்பத்தையும், ஒரு துருத்தி தண்ணீரையும் எடுத்து ஆகாருடைய தோளின் மேல் வைத்துப் பிள்ளையையும் ஒப்புக்கொடுத்து, அவளை அனுப்பிவிட்டான். **(ஆதியாகமம் 21:14)** அதோடு ஆகாரின் கதை முடிந்திருக்க வேண்டும். ஆனால் ஆகாரின் கதை முடியவில்லை. அது தொடர்ந்தது. ஆகார் தன் 16 வயது மகனோடு வனாந்தரத்தில் அலைந்து திரிகிறாள். இஸ்மவேலுக்கும் முடியவில்லை. சுருண்டுப் படுத்துவிட்டான். ஆகாருக்கு கொஞ்சம் பெலன் இருந்தது. அவள் இஸ்மவேலை ஒரு செடியின் கீழே விட்டு,"என் மகன் சாகிறதை நான் பார்க்க மாட்டேன்" என்று எதிராக அம்பு பாயும் தூரத்திலே போய் உட்கார்ந்து சத்தமிட்டு அழுதாள். **(ஆதியாகமம் 21:15,16)** தேவன் அங்கு போகிறார். ஏன் போகிறார்? ஆகாரைத் தேடிப் போகிறார். ஆகார் நின்று, அழுத இடத்தில் போய் இவரும் நிற்கிறார். **(ஆதியாகமம் 21.17)** "ஆகாரே உனக்கு என்ன சம்பவித்தது?" என்று கேட்கிறார். இவருக்கு தெரியாதா? என்ன சம்பவித்தது? என்று. இவர் தான் "ஆகாரை அனுப்பிவிடு" என்று சொன்னவர். இப்பொழுது இவரே போய் ஆகாரிடம் கேட்கிறார், "உனக்கு என்ன சம்பவித்தது?" என்று. போய் அவளை விசாரிக்கிறார்? ஆகார் யார்? ஒரு அடிமை பெண். கணவனால் கைவிடப்பட்டவள். தன் நாச்சியாரால் அற்பமாக எண்ணப்பட்டவள். அவளையா! "கர்த்தர் தேடி போய் விசாரிக்கிறார்?"

ஆமாம். "அனுப்பி விடு" என்று ஆபிரகாமுக்கு சொன்னவர் , இங்கு வந்து "அவளுக்கு துணையாக நிற்கிறார்." நீங்கள் பல இடங்களிலிருந்து துரத்தி அடிக்கப்பட்டு இருக்கலாம். நீங்கள் மற்றவர்களால் அற்பமாக எண்ணப்பட்டு இருக்கலாம். "நீ ஆகாதவன்" என்று மற்றவர்கள் சொல்லி இருக்கலாம். நீங்கள் யாராக இருந்தாலும், உங்கள் பிண்ணனி எதுவாக இருந்தாலும் சரி, *"தேவன் உங்கள் மேல் கரிசனை உள்ளவர். அவரே உங்கள் மேல் நினைவாகவே இருப்பவர். என்றும் அவரே உங்கள் துணை. ஒரு அடிமைப்பெண்ணை அவரால் நினைக்க முடியும் என்றால், கணவனால் கைவிடப்பட்ட ஒரு பெண்ணை நினைக்க முடியும் என்றால், "உங்களையும், என்னையும் நினைப்பது அதிக நிச்சயம் அல்லவா!" முதலில் ஒரு தடவை ஆகார் ஓடிப் போகிறாள். அப்பவே அவர் விட்டு இருக்க வேண்டும். அப்பவும் போய் சொல்லுகிறார். "உன் நாச்சியார் அண்டைக்கு திரும்பி போய், அவள் கையின் கீழ் அடங்கி இரு "என்றார்.**(ஆதியாகமம் 16:9)** அடிமைப்பெண்ணாக இருந்தாலும், தேவனுடைய அக்கறையைப் பாருங்கள். அடிமைப்பெண்ணாகிய ஆகாருக்கே, "தேவன் ஒரு அற்புதம் செய்ய முடியும்" என்றால், "தேவப்பிள்ளைகளாக இருக்கிற உங்களுக்கு ஏன் செய்ய முடியாது?" நிச்சயம் செய்வார். அவளுக்காக ஒரு ஊற்றைத் திறக்கிறார். அந்த ஊற்று அங்கு தான் இருக்கிறது. அந்த ஊற்றைப்பார்க்கும் படியாக தேவன் அவள் கண்களைத் திறக்கிறார். இந்த அடிமை பெண்ணை அவர் விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை. இவளை நினைக்க வேண்டிய அவசியம் இல்லை. *"நினைத்தார். விசாரித்தார். துணையாக நின்றார்."

இந்த புதிய மாதத்தில், *கர்த்தர் உங்களையும் நினைத்திருக்கிறார். *உங்களுக்கு உதவி செய்வார். *உங்கள் தேவைகள் அனைத்தையும் சந்திப்பார். *தேவனிடத்திலிருந்து பெரியக் காரியங்களை எதிர்ப்பாருங்கள். "கர்த்தரோ என் மேல் நினைவாயிருக்கிறார். தேவரீர் என் துணையும், என்னை விடுவிக்கிறவருமாயிருக்கிறீர்." ஆமென்.


கிறிஸ்துவின் பணியில், **Pas. Joseph Xavier**

# Family Corner

## கர்த்தர்மேல் நம்பிக்கை



கர்த்தருக்குள் பிரியமானவர்களே
அநேக நேரங்களில் நாம் விரும்பிய காரியம் நடப்பதற்கு மற்றவர்களை சார்ந்து மனிதர்களை நம்பி இருந்துவிடுகிறோம் அல்லது ஏதோ ஒரு பொருளை, பணத்தை, வசதிகளை நம்பியிருக்கிறோம்.
ஒரு விவசாயி தன நிலத்தை நம்பி, விதையை நம்பி, வானத்து மழையை நம்பி,வாலிபர் தன் இளமையை நம்பி,சிலர் தன் வேலையை நம்பி,வயதான பெற்றோர் தன பிள்ளைகளை நம்பி... இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் நம்பிக்கையாய் இருக்கிறார்கள்.
இது தவறில்லைதான்...ஆனால் இவையெல்லாவற்றிற்கும் ஒரு எல்லை உண்டு. சிலநேரங்களில் நாம் நம்பினவர்களாலே நாம் விரும்பியது நடந்தாலும் பல நேரங்களில் நாம் ஏமாந்து தானே போ கிறோம். கர்த்தருடைய வார்த்தையும் இதைத்தான் எரேமியா 17:5இல் சொல்கிறது "மனுஷன்மேல் நம்பிக்கைவைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக்கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்."
ஆனால் அதே நேரத்தில் கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். என்று கர்த்தருடைய வார்த்தை சொல்கிறது. (எரேமியா 17:7)
இதே கருத்தை சங்கீதம் 33:12 மற்றும் சங்கீதம் 146:5 இல் பார்க்கிறோம்.
ஆம் தேவ பிள்ளைகளே நாம் கத்தர் மீது நம்பிக்கை வைப்பது ஒரு செயல் அத்தோடு கர்த்தரையே நம்பிக்கையாக கொண்டிருப்பது அதிக நன்மையானது. காரணம்...அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனிகொடுக்கிறதுமான மரத்தைப்போலிருப்பான்.(எரேமியா 17:10)




நாம் நம் கர்த்தராக்கி நம்பிக்கையாக கொண்டிருப்பது நமக்கு எப்படிப்பட்ட பாக்கியம் இது ....
கர்த்தரை நம்புவோர்...கைவிடப்பட்டதில்லை, வெட்கப்பட்டதில்லை, மறக்கப்பட்டதில்லை
கர்த்தரை நம்புவோர்....செழிப்பார்கள், உயர்ந்த அடைக்கலத்தில் வைக்கப்படுவார்கள், எல்லாவற்றிற்கும் மேலாக கர்த்தரை நம்புவோருக்கு அவரது கிருபை சூழ்ந்துகொள்ளும்.
ஆகவே நாம் விரும்பினது நடந்தாலும் சரி நடக்காவிட்டாலும் சரி எந்த சூழ்நிலையிலும் நாம் கர்த்தரையே நம்புவோம் கடல் அலைகளில் கலங்காமல் நிற்கும் கப்பலை நிறுத்தும் நங்கூரம் போல நமது நம்பிக்கையே கர்த்தர் தான். ஆமென் . அல்லேலூயா
நம் தேவனாகிய கர்த்தர்தாமே இந்த வார்த்தைகளின்படியே நம்மை ஆசீர்வதிப்பாராக.. – **Bro. Subbiah**

**கர்த்தர் தாமே நம் குடும்பங்களில் மகிமைப்படுவராக. ஆமென்**

# Youth Corner

## IS GOD INTERESTED IN OUR ACADEMIC AND PROFESSIONAL LIFE?



At the end of a long and tiring day of work and study, I found myself wondering, "Is this all really worth it? Am I wasting the time that God has given me on secular and materialistic activities while I could spend this time doing God's work?" As these thoughts spiraled in my mind, I longed to attain the answer to the question – Does God want to be involved in our academic and professional lives?

### SECULAR VS SPIRITUAL

Most Christians are brought up to believe that life is divided into two disconnected parts. God is in one spiritual dimension and work(study) is in the other real dimension, and the two have nothing to do with each other. God stays in His corner of the universe while I go to work and live my life, and these different realms never interact. Due to this view of life, we often find ourselves amidst a constant battle between our secular and spiritual lives. We struggle to maintain an appropriate balance or manage to spend our time and effort only on either one. Which is why, it is increasingly important for us to develop a biblical view of work and study.

### WELL.... WHAT DOES THE BIBLE SAY?

When we read the initial chapters of Genesis, it is evident that our God is a worker. Being created in His image, we are hardwired with a desire to work as well. This was part of God's plan for us (Genesis 2:15). Moreover, Solomon states that finding satisfaction and enjoyment in our work is a gift from God (Ecclesiastes 5:18-19).

Furthermore, through the lives of many Bible characters including Solomon, Daniel, Joseph, Moses, Paul, etc. it is noticeable that it pleased God to use their wisdom, skills and profession to manifest His glory. This was also witnessed by the people around them. Their lives inspired the people around them to glorify the Lord for His mercies towards His children. Even to this day, it pleases God to use us and our wisdom, knowledge, talents, skills, profession, etc. to manifest His glory.

### SO WHAT?

As Christians we are called to use our entire lives to glorify God. As mentioned in Colossians 3:23-24 – "And whatever you do, do it heartily, as to the Lord and not to men, knowing that from the Lord you will receive the reward of the inheritance; for you serve the Lord Christ." It is important for us to always remember that we do not serve men, but we serve the Lord Jesus Christ. It's helpful to envision that behind every employer or teacher stands the Lord Jesus since this would motivate us work enthusiastically and deliver our best, even though we might not receive due appreciation and acknowledgement for our hard work. It only matters that Jesus sees and appreciates what we do.

So, the next time you see your boss asking for a report or your teacher asking for your homework, you should see Jesus instead. I would like to end on this note -

"Work becomes worship when you dedicate it to God and perform it with an awareness of his presence. – Rick Warren" **- In Christ, Sis. Abijah Gnanasekar**

**Let's LOL!**

*This section aims to inspire the young hearts to **Live Out Loud** and manifest our Lord and Savior Jesus Christ in every aspect of their lives.*

- Find out living testimonies of children of God whose skills, knowledge and profession were used for the glory of God.
- Think about how many times your professional or academic life was used to glorify God in this year. Seek God's help to excel in whatever you do.
- Consider how your excellence in studies and profession could be used for the purpose of God's kingdom.

# Kids Corner

Kids Series
END




## Guess the End Contest

**WINNER IS “JOANNA PREM”**



# Missionary Life




சுயத்தால் சாதிக்க முடியாததை, ஜெபத்தால் சாதிக்க முடியும். ஜெபத்தைவிட அதிக பலம் பொருந்திய ஆயுதம் வேறொன்றும் இல்லை. இது உண்மை தானே? நிச்சயம் உங்களால் உண்மை என்றே சொல்ல முடியும்.

ரீஸ் ஹவல்ஸ், ஜெபத்தில் ஒரு புதிய பரிணாமத்தைக் கண்டவர். இவரின் ஜெபம் ஒரு குறுகிய வட்டத்திற்குள் அடங்கியதல்ல, தனக்காகவும், தன் குடும்பத்திற்காகவும் ஜெபிப்போர் பலர். ஆனால் பிறருக்காக ஜெபிப்பதிலேயே பேரானந்தம் அடங்கியுள்ளது என்றார்.

பரிசுத்த ஆவியானவரால் ஆட்கொள்ளப்பட்ட ரீஸ் ஹவல்ஸ், பிறருக்காக பரிந்து மன்றாடுவதில் சிறந்தவர். இடைவிடாமல் ஜெபத்திலே தரித்திருந்தவர். ஜெபத்தின் மூலமாக இறைவனுடன் இரண்டறக் கலந்திருந்தார்.

விசுவாசத்துடன் கூடிய ஜெபத்தினால் அநேகர் இவர் மூலம் சுகம் பெற்றார்கள். சரீர சுகத்தை விட ஆன்மிக சுகத்திலே மிகுந்த அக்கறை உள்ளவராயிருந்தார்.

இங்கிலாந்தின் சுற்றுப்புறங்களில் ஊழியம் செய்த ஹவல்ஸ், கடவுளின் அழைப்பை ஏற்று தென்னாப்பிரிக்கா சென்றார். எழுப்புதல் கூட்டங்கள் மூலம் மக்களின் ஆன்மீக வாழ்வைத் தட்டி எழுப்பினார்.

நாடோடிகளுக்கு மறுவாழ்வு கொடுத்தார். ஆதரவற்றக் குழந்தைகளின் தந்தையானார். ஜெபமே இவரின் வெற்றிக்கு மூலதனமாயிற்று

தாய்நாடு திரும்பிய ஹவல்ஸ் மாபெரும் வேதாகமக் கல்லூரியை நிறுவினார். ஜெபக் குழுக்கள் தோற்றுவிக்கப்பட்டன. அநேக மிஷனெரிகள் எழுப்பப்பட்டார்கள்.

"பரிந்துரை ஜெபவீரன்" என்றழைக்கப்படும் ரீஸ் ஹவல்ஸ் பிப்ரவரி 13ம் நாள் ஜெபத்தை கேட்கும் ஜெய வீரரோடு இணைந்தார்.

அன்பரே ரீஸ் ஹவல்ஸை போன்று ஜெபவீரனாக காணப்படுகிறீர்களா?

| | |
|---|---|
| வாழ்விலிருந்து வாழ்வுக்கு | – ஜெபத்தினால் இளைப்பாறுதலை பெறாதவன் இன்னும் இறைவனிடம் வந்து சேரவில்லை |
| குயவனின் கரங்களில் | -ஆண்டவரே! ஜெபிக்கும் முழங்கால்களை எனக்குத் தாரும் |

# Testimony Time


## கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்.



கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம். என்னை முதல் முதலில் தொட்ட வசனம் **சங்கீதம் 34 8. கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள் அவர் மேல் நம்பிக்கையாக இருக்கிற மனுஷன் பாக்கியவான்.** நானொரு ரோமன் கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்தவள். எங்கள் குடும்பத்தில் நாங்கள் அனைவரும் மதர் மேரி மட்டும் வழிபாடு செய்பவர்கள். எனது அக்கா செல்வி என்பவர்கள் இரட்சிக்கப்பட்டவர்கள் அவள் ஒருநாள் என்னைஆலயத்துக்கு அழைத்துச் சென்றார். எனக்கோ அல்லேலூயா என்ற வார்த்தையே பிடிக்காத ஒன்று ஆனாலும் ஏதாகிலும் ஒரு குறை கண்டுபிடித்து மறுபடியும் போக கூடாது என்று மனதில் சிந்தித்து என் அக்காவுடன் நான் சென்றேன். அனைவரும் ஆலயத்தில் ஆராதனை செய்து கொண்டிருந்தார்கள் பக்தியோடு .நான் எல்லோரையும் பார்த்துவிட்டு என் கண்களை மூடி நான் உண்மையான தேவனை பார்க்கவேண்டும் என்று பிரார்த்தித்தேன். தேவன் எனக்கு ஒரு தரிசனம் தந்தார் அந்த தரிசனத்தில், ஜலத்தின்மேல் ஒருவர் அசை வாடுகிறார் அவர் முகம் மிகுந்த சமாதானம் உள்ள ஒரு முகமாய் இருந்தது. அந்த முகத்தைப் பார்த்து என் கண்களை திறக்கவே எனக்கு கொஞ்சம் கூட விருப்பமில்லை, என் கண் அவரை பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று விரும்பினது. ஆனால் ஆராதனையும் முடிந்துவிட்டது. பின்பு ஜெபக் கூட்டம் முடிந்து நானும் என் அக்காவும் வீட்டுக்கு சென்று விட்டோம். எனக்கு நடந்ததை நான் என் அக்காவிடம் சொல்லவே இல்லை சொன்னால் ,என் அக்கா என்னை அல்லேலுயா கூட்டத்துக்கு மாற்றி விடுவாள் என்ற ஒரு பயம். வீட்டில் என் அக்காவுடன் பைபிள் கேட்டேன் பைபிள் கொடுத்தாங்க. பைபிள் திறந்து நான் வாசித்த வசனம் ஆதியிலே தேவன் ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார் அந்த வசனத்தை வாசித்தவுடன் நான் பிரமித்துப் போனேன். அன்றைய தினம் முதல் இன்றைய வரைக்கும் நான் அனுதினம் தேவனை ருசி பார்த்துக் கொண்டிருக்கிறேன் .கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள் அவர் மேல் நம்பிக்கையாய் இருக்கிற மனுஷன் பாக்கியவான் தேவனை தெரிந்த நாம் அனைவரும் பாக்கியவான்கள் பாக்கியவதி அதில் நானும் ஒருத்தி. நான் இரட்சிக்கப்பட்ட உடன் என் வீட்டில் எனக்கு எதிர்ப்பு வந்தது. பின்பு நான் இரவு முழுவதும் ஒவ்வொரு நாளும் வேத வாசிப்பேன். என் தாயார் இதைப் பார்த்து உனக்கு என்ன பைத்தியமா, சர்ச் பாஸ்டர் கிட்ட போய் நான் சண்டை போட போறேன். பின்பு கர்த்தர் என் தாயாரையும் தொட்டார் என் குடும்பத்தில் அனைவரும் இரட்சிக்கப்பட்டார்கள் . பின்பு என் திருமண வாழ்க்கையை ஜெபத்தில் வைத்தேன் எனக்கு யாரு பைபிள் கொடுக்கிறார்களோ அவங்க தான் என் கணவர் ,அதான் அடையாளம் என்று நான் ஜெபித்தேன். நான் எதிர்பார்க்காத ஒரு இந்து மனிதர் தான் எனக்கு பைபிள் கொடுத்தார். பைபிள் வாங்கின ஒரு மாதத்தில் அவருடன் எனக்கு திருமணம் நடந்தது. என் கணவர் ஒரு இந்து மனிதன் நான் கிறிஸ்தவ பெண் அதனால் அனேக எதிர்ப்புகள் பிரச்சனைகள் , தேவன் எல்லாவற்றிலும் நின்று சாட்சியா நிறுத்தினார். என் கணவரும் தேவனால் இரட்சிக்கப் பட்டார். நான் ஒரு சமாதானம் வாழ்க்கை வாழ்கிறேன். தேவனுடைய நாமத்திற்கே மகிமை உண்டாவதாக ஆமென். **கிறிஸ்துவுக்குள் உஷா வேல்முருகன்.**



# Talent Corner






CALLIGRAPHY BY:

"SIS. BERYL ARUN"

COME ON DON'T HIDE YOUR TALENTS ANYMORE. THIS IS THE TIME TO REVEAL IT. YOU CAN SEND US YOUR TALENTS THROUGH ANY MEANS SUCH AS




YouTube link

Audio

Photos

ON OR BEFORE 25TH OF EVERY MONTH TO PUBLISH IN OUR MAGAZINE.

# Quiz Corner

★ Exiting Prizes are Awaiting on 24th DEC 2021, Christmas

Outside UAE Winners will also receive Gifts

**WRITE YOUR ANSWERS WITH REFERENCE VERSES.**
**(EACH QUESTION CONTAINS 2 MARKS)**
**சங்கீதம் பகுதியின் கேள்விகள்**

1. கர்த்தர் அரசாட்சியால் எது அசைவதில்லை?
2. இடியுங்கள் இடியுங்கள் என எருசலேமைக்குறித்து சொன்னவர்கள் யார்?
3. கர்த்தர் யாரை அழித்துப்போடுவார் என தாவீது கூறுகிறார்?
4. எது உலகெமெங்கும் சுற்றுகிறது?
5. அப்பமாக புசிக்கப்பட்டது எது?

## QUESTIONS IN ENGLISH FROM PSALM

1. When the Lord reigns, what is established firmly?
2. Raze it, Raze it – who said so?
3. Whom does the Lord destroy?
4. What parades and struts throughout the earth?
5. What was eaten like bread?

**Write your answers on a paper take photo and send us through our email siloamachurch@gmail.com on or before 25th October 2021**

**Scoring Method:**

- **Extra 5 Marks for those who submit before the submission date**
- **Extra 4 Marks for those who submit on the submission date**
- **Scoring for each individual will be based on the correct answer and the duration**
- **Bonus 2 marks will be added along with Extra 5 Marks for those who submit their answers within 5 days from the date of magazine released**

# Quiz Answers

**October 2021 Quiz Answer:**

1. ஆதி 28: 10 - 19
2. 2 சாமு 18: 9 - 17
3. 1 சாமு 6: 13 - 18
4. யாத் 17: 8 - 13
5. தானி 2: 28 - 35,44

## SCORE BOARD

| Name | Score | Extra | Bonus |
|---|---|---|---|
| Bro. Tejan | 51 | 5 | 2 |
| Bro. Robert | 13 | | |
| Sis. Joanna | 53 | 5 | 2 |
| Sis. Sundari | 36.5 | | |
| Sis. Sabrina | 31.5 | | |
| Sis. Ria | 32 | | |
| Sis. Melcia | 15 | | |
| Bro. Joshua | 30 | 5 | 2 |
| Sis. Beryl | 32 | | |
| Bro. Bejoy | 16 | | |



**OCT 2021 WINNERS**


**1st Prize – Joanna**

**2nd Prize – Tejaan & Joshua**


# Trainings & DIY


## SIMPLE "BIBLE BOOK MARK"

**Materials:** Ice cream stick, Elastic strap, Needle & thread, Glue, Scissors or Pen knife,
















Credits: [http://onelmon.com/blog/2014/05/ice-cream-sticks-2-arrow-bookmark/](http://onelmon.com/blog/2014/05/ice-cream-sticks-2-arrow-bookmark/)

# Events and Announcements

| Days | Events |
|---|---|
| 1St Day Of The Every Month | Early Morning Sermon (05:00 AM To 05:30 AM) **ONLINE** |
| 1st Monday Of Every Month | Intercessory Prayer (In Home, 08:00 PM To 09:00 PM) **ONLINE** |
| 1st Saturday Of Every Month Morning | Men's Meeting (08:00 PM To 09:00 PM) **ONLINE** |
| 2nd Saturday Of The Month | Chain Prayer (02:00 PM To 02:00 AM) |
| 3rd Friday Of The Month | Fasting Prayer With Holy Communion(10:00 AM To 12:00 PM) ONLINE |
| 4th Thursday Of The Month | Night Prayer (08:00 PM To 10:00 PM) **ONLINE** |
| 4th Sunday of the Month | Ladies Meeting (08:00 PM To 09:00 PM) **ONLINE** |
| 5th Thursdays In The Calendar Year | Outing/Other Activities --- |
| Every Week Friday | Main Service (03:00 PM To 04:30 PM) at St. Andrews Church Center, Community Hall, Abu Dhabi, UAE |
| Every Week Friday (Except 3rd Week) | Children Wing (Sunday class) Online – 07:00 PM to 08:00 PM followed by zoom class |
| Last week of the month | Youth Meeting **ONLINE** |

**Congregation Zoom ID**

ID: 2604201321

Pass: sacuae

**Congregation YouTube Link**

https://www.youtube.com/channel/UC1jUqz7RLNSG2HqRO5Z5XwQ

**Congregation Facebook Link**

Visit us Siloam Apostolic Congregation Page

**Congregation Email ID**

siloamachurch@gmail.com

**2021 CHRISTMAS PROGRAM WILL BE ON 24TH DEC, FRIDAY, 07 PM TO 10 PM AT ALMAYA SUPERMARKET BUILDING, ELECTRA STREET, ABU DHABI**

For Any Prayer Request and for counselling, please contact Our Congregation Pastor

**Pastor. Joseph Xavier**

0567354935

Subscribe to our YouTube Channel

**Please Click the Link to Subscribe**

https://www.youtube.com/c/SiloamApostolicChurch

**STAY BLESSED. STAY SAFE. SEE YOU ALL IN THE NEXT MAGAZINE**